1972 ஆகஸ்ட் 25]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கிழக்குக் கடற்கரை ரோடு கன்னியா குமரி வரை செல்லுவதைத் தேசிய நெடுஞ்சாலையாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஆனால் மத்திய அரசாங்கம் அனுமதிக்கவில்லை.

கருவேலன் குளம்.

*288 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா?

(அ) குளித்தலை வட்டம், மஞ்சநாயக்கன்பட்டி கிராமத்திலுள்ள கரு வேலன் குளத்தை புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) ஆம்.

(இ) திட்டம் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கருவேலன் குளத்தைத் தனி நபர் ஆக்கிரமித்துக் கொண்டு திட்டத்தை நிறைவேற்ற இடையூறாக இருக்கிறார். அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆக்கிரமிப்பு பற்றிய தகவல் இல்லை. குளித்தலை வட்டம், மஞ்சநாயக்கம்பட்டி கிராமத்தில் பாசனம் செய்யக்கூடிய அளவுக்குக் குளம் ஒன்றும் இல்லை. இருந்தாலும் சர்வே எண் 180/1, 180/3, 180/4 ஆகிய இடங்களை ஒரு குட்டையாக மாற்றியமைக்கும் உத்தேசம் இருக்கிறது. இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

நொய்யலாற்றின் குறுக்கே அணை.

*289 வினா.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உங்கம்பாளையம் அருகில் நொய்யல் ஆற்றின் மீது அணை ஒன்று கட்டி க. பரமத்தி ஊராட்சி ஒன்றிய மக்களுக்கு பாசன வசதி தரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும் ?